**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்றிட்டம் கட்டம் 1 - 2017**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்றிட்டம் - கட்டம் I இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஜசீஏ) இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்- பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்றிட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்றிட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், அப்போதைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சான தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயற்றிட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. வடக்கு அநுராதபுரம் பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5,166 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. பினனர், செயற்றிட்டத்தின் காலப்பகுதி 2020 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும்

கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களானது 2018 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தெம்பர் 10 இலேயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 20.19 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணக்கொடை அதகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தில் 5 ஆண்டுகளிற்கு மேலாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களிற்காக 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆணடிற்காக நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நதிதிகளின் பயன்பாடு மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான திரண்ட நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 5,166 | 8,726 | 237.21 | 166.89 | 226.90 | 536.35 | 673.34 |
| இலங்கை அரசாங்கம் | 1,651 | 2,789 | 62.05 | 46.16 | 62.76 | 181.94 | 227.24 |
| மொத்தம் | 6,817 | 11,515 | 299.26 | 213.05 | 289.66 | 718.29 | 900.58 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள் தாமதம் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கிய திகதியிலிருந்து 04 ஆண்டுகளும் 10 மாதங்களும் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 5,166 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 7.71 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 673.34 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 536.35 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2. பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 12.23 சதவீதம் மற்றும் 8.66 சதவீதமாக இருந்தது. மேலும், 2018 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு முறையே 19.87 சதவீதம் மற்றும் 21.97 சதவீதத்தின் பௌதீக முன்னேற்றத்தின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீர்த் தேக்க வசதி, தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம், நிலத்தடி நீர் தொட்டிகள், உலர்த்தப்பட்ட தொட்டிகள், அலுவலக கட்டிடம் மற்றும் ஏனைய இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் போன்றவற்றின் முன்னேற்றத்தின் மீதான நடவடிக்கைகள் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் ஒப்பந்தங்கள் வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் அவற்றின் மதிப்பாய்வு என்பவற்றிலுள்ள தாமதம், கேள்வி மதிப்பாய்விற்காக எடுக்கப்பட்ட காலப்பகுதி மற்றும் அமைச்சரவையின் அனுமதி பெறல் போன்றன காரணமாக 2018 மார்ச் 23 இலேயே அவற்றின் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நாளாந்த முன்னேற்ற அறிக்கை மற்றும் மற்றும் நிர்மாண வேலைத்தளங்களில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனை என்பவற்றின் பிரகாரம், ஒப்பந்தகாரர் உரிய காலத்தில் வேலைகளை பூர்த்திசெய்வற்கு போதிய

தொழிலாளர் படையணி ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என வெளிப்பட்டது. மேலும், தண்ணீர் தொட்டியின் நிர்மாண வேலைகள், நிலத்தடி நீர்த் தேக்கம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகள் என்பவற்றின் நிர்மாண வேலைகள் காணிச் சுவீகரிப்பிலுள்ள தகராறு காரணமாக 2018 திசெம்பர் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதவாச்சிய மற்றும் றாபவ பகுதிகளில் உயர் டென்சிற்றி பொலி எதின்ஸ் குழாய்கள் வழங்கி பொருத்துதல்ஈ துருப்பிடிக்காத இரும்பு குழாய்கள் பிரதான பரிமாற்றம் மற்றும் மற்றும் பிரதான விநியோகம் என்பவற்றின் ஒப்பந்தம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 04 ஆண்டுகளும் 09 மாதங்களும் கடந்த பின்னர் 2017 நவப்பரில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட உரிய 252,353 மீற்றர் குழாயிடல் வேலைகளில் 2018 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 4627.18 மீற்றர் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(இ) இசிங்பெசாகல் பகுதியில் பொலி வினில் பூசப்படாத குழாய்கள் குழாயிடல் மற்றும் துரப்பிடிக்காத இரும்புக் குழாய்கள் மற்றும் கல்வனிசட் இரும்புக் குழாய்கள் வழங்கி பொருத்துதல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 03 ஆண்டுகளும் 09 மாதங்களும் கடந்த பின்னர் 2016 ஒக்தோபரில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட உரிய 112,311 மீற்றர் குழாயிடல் வேலைகளில் 2018 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 101,073.46 மீற்றர் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**3.4 முரணான நடவடிக்கைகள்**

செயற்திட்டமானது 2014 இல் ரூபா 129.05 மில்லியன் கிரயத்தில் 11 தண்ணீர் பவுசர்கள், 02 மோட்டார் கார்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தண்ணீர் பவுசரில் ஒன்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கேகாலை பிராந்திய அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த அதேநேரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அநுராதபுரம் பிராந்திய ஆதார சேவைகள் அலுவலகத்திற்கு மோட்டார் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டமானது போக்குவரத்து தேவைகளிற்கு வெளிநபர் வளங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மீது ரூபா 12.46 மில்லியன் தொகை செலவழித்திருந்தது.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 42 பதவிநிலைகளைக் கொண்டுள்ள போதிலும், 04 சிவில் மற்றும் எந்திரவியல் பொறியியலாளர்கள், 04 உதவி பொறியியலாளர்கள் மற்றும் செயற்திட்ட கணக்காளர் உள்ளடங்கலாக 17 பதியணிநிலைகளின் வெற்றிடங்கள் 2018 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கு மேலாக நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆகஸ்ட் 07 இல் நீர்ப் பாசனத் திணைக்களத்துடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், மஹாகந்த குளத்தின் பிரதான மற்றும் துணைநிலை முறைமையின் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வாற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ரூபா 300 மில்லியன் தொகை செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 ஒக்தோபர் 30 வரையும் அத்தெகையயை அனுப்புவதற்கும் உரிய வேலைகளை பூர்த்தியாக்குவதற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.